Registered as a News Paper    பக்கங்கள் 4    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    மாசி 27    [10 - 3 - 1993]    புதன்கிழமை    ஓசை 20

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## குழந்தைகளுக்கான முத்திரை குறைந்தளவே அனுப்பி வைப்பு

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான உணவு முத்திரைகள் கேட்டதை விடக் குறைந்த அளவே யாழ். செயலகத்தில் உள்ள வறுமை நிவாரணப் பகுதிக்கு புனர்வாழ்வு அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக முத்திரைகளைப் பெறுவதற்கு கிராம அலுவலர் பகுதியிலுள்ள ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பிறந்த திகதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திர இலக்கம் ஆகிய விபரங்கள் அடங்கிய பட்டியலைத் தயாரித்து அனுப்புமாறு அனைத்துக் கிராம அலுவலர்களும் கேட்கப்பட்டுள்ளார்கள் குழந்தைகளுக்கான உணவு முத்திரையின் அடிப்படையிலேயே குழந்தைகளுக்கான பால்மா வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# சங்குப்பிட்டி - கேரதீவு பாதை ஊடாக உணவு வாகனங்கள் வர புலிகள் அனுமதி

## ஐ. நா. அதிகாரிகள் கண்காணிப்பர்

[யாழ்ப்பாணம்]

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்தின் கண்காணிப்பின் கீழ் சங்குப்பிட்டி-கேரதீவு பாதையூடாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவரும் வாகனங்களை போக்குவரத்திற்கு அனுமதிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதுபற்றி ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் சிறிலங்கா அரசுடனும் இராணுவ தலைமைப்பீடத்துடனும் பேச்சுக்களை நடத்தவிருக்கிறது. அரச தரப்பு இணங்கும் பட்சத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவரும் தனியார் மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் பூநகரி பாதையூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும். இந்த வாகனப்போக்குவரத்து ஐ. நா. அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறும்.

நேற்று, ஐ. நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரி டாக்டர் பீட்டர் நீக்கலசுக்கும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் மத்தியில் இரண்டாவது தடவையாக பேச்சுக்கள் நடைபெற்றன. இப்பேச்சுக்களின் போது புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர். இப்பேச்சுக்களின் போது சங்குப்பிட்டி-கேரதீவு பாதையூடாக உணவு வாகனங்களை அனுமதிக்கும் யோசனையை புலிகள் முன் வைத்தனர்.

பூநகரி பாதை ஊடாக பொதுமக்களை அனுமதிப்பது சம்பந்தமாக தொடர்ந்து அடுத்த கட்டமாக பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன. ஐ. நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரி டாக்டர் நீக்கலஸ் நேற்று பிற்பகல் கப்பல் மூலம் கொழும்பு பயணமாகியுள்ளார். அரசுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு மீண்டும் அவர் யாழ்ப்பாணம் வரும்பொழுது அடுத்த கட்டப் பேச்சுக்கள் தொடரும்.

## மூன்று கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்பட்டன

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று மூன்று கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்பட்டன. குமாரி கப்பலிலிருந்த இறுதி இருப்பு பொருள்கள் இறக்கப்பட்டதுடன் யாழ். குடாநாட்டில் இருந்து சேகரிக்கப்பட்ட 60 தபால் பைகள் கொழும்பு கொண்டு செல்லப்பட்டன.

குமண, நில்கிரி கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலையும் நேற்று ஆரம்பமானது என தெரியவருகின்றது. குமண கப்பலின் பொருள்கள் இறக்கப்பட்ட பின்னர் நோயாளர்களை குமண மூலம் கொழும்புக்கு கொண்டுசெல்ல ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

(நி, க)

## 2000 மெற்றிக்தொன் அரிசி

### சங்குப்பிட்டி இறங்குதுறைக்கு

## காலையில் வந்த ராணுவம் மதியம் முகாம் திரும்பியது

பூநகரிமுகாமிலிருந்து நேற்று காலை 6.30 மணியளவில் முன்னேறிவந்த இராணுவத்தினர் சங்குப்பிட்டி துறை வரை வந்தடைந்தனர்.

இவர்களுக்கு உதவியாக நான்கு விசைப்படகுகள் கடலில் காவல் செய்தன. உலங்கு வானூர்தி ஒன்று தாழப்பறந்து பாதுகாப்பு வழங்கியது.

ஆனால் இப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் பகல் 11.30 மணியளவில் தாக்குதல் எதுவும் நடத்தாமல் முகாம் திரும்பினர்.

## மகிழடித்தீவு படுகொலை குற்றச்சாட்டுக்கு மறுப்பு

(மட்டக்களப்பு)

மகிழடித்தீவு கொலைகள் தொடர்பாக மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இருபத்திமூன்று இராணுவத்தினரும் அவர்களுக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றங்களுக்கு சுற்றவாளிகள் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராக எண்பத்திமூன்று குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட மகிழடித்தீவில் ஆகஸ்ட் 9, 1992 இல் இவர்கள் சட்டவிரோதமாகக் கூடி முப்பத்தைந்து தமிழர்களை அடித்தும், சுட்டும் கொன்றதாகவும், வேறு பல குற்றங்கள் புரிந்ததாகவும் இவர்களுக்கு எதிரான மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினால் இராணுவப் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் இந்த இருபத்திமூன்று இராணுவத்தினருக்கும் எதிரான பூர்வாங்க விசாரணை ஏப்பிரல் மாதம் மூன்றாம் வாரத்தில் ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு



லெப். றெஜி

08-03-93 திங்கட்கிழமை நண்பகல் 12.10 மணியளவில் ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த வண்ணாங்குளம் காட்டுப்பாதையில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் சென்றுகொண்டிருந்த சமயம் இனந்தெரியாதோரின் தாக்குதலினால் அவ்விருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்புலன்ஸ் செல்லத் தடை; நோயாளி 'பரிதாப மரணம்

கிளிநொச்சியிலிருந்து நோயாளிகளுடன் சென்ற அம்புலன்ஸ் வண்டியை வவுனியா தடைமுகாம் இராணுவத்தினர் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதி மறுத்ததினால் பெண் நோயாளி ஒருவர் பரிதாபகரமாக மரணமானார்.

நேற்று கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து இலங்கை செஞ்சிலுவை சங்க அம்புலன்ஸ் மூலம் 5 நோயாளர்கள் வவுனியா ஆஸ்பத்திரிக்கு மேலதிக சிகிச்சைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர்.

அம்புலன்ஸ் பயணத்தை தொடர வவுனியா தடைமுகாம் படையினர் அனுமதிக்காமையினால் வாகனம் திரும்பிவர வேண்டிய நிலை ஏற்பட்டது. வரும் வழியில் நோயாளிகளில் ஒருவரான இரவீந்திரா சரஸ்வதி என்பவர் மரணமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

[16]

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் மத்தியில் இரண்டாவது தடவையாக பேச்சுக்கள் நடைபெற்றன. இப்பேச்சுக்களின் போது புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் சங்குப்பிட்டி-கேரதீவு பாதையூடாக உணவு வாகனங்களை அனுமதிக்கும் யோசனையை புலிகள் முன் வைத்தனர்.

பூநகரி பாதை ஊடாக பொதுமக்களை அனுமதிப்பது சம்பந்தமாக தொடர்ந்து அடுத்த கட்டமாக பேச்சுக்கள் பகல் கப்பல் மூலம் கொழும்பு பயணமாகியுள்ளார். அரசுடன் வரும்பொழுது அடுத்த கட்டப் பேச்சுக்கள் தொடரும்.

மகிழடித்தீவில் ஆகஸ்ட் 9, 1992 இல் இவர்கள் சட்ட

கிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்பட்டன

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று மூன்று கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்பட்டன. குமாரி கப்பலிலிருந்த இறுதி இருப்பு பொருள்கள் இறக்கப்பட்டதுடன் யாழ். குடாநாட்டில் இருந்து சேகரிக்கப்பட்ட 60 தபால் பைகள் கொழும்பு கொண்டு செல்லப்பட்டன.

குமண, நில்கிரி கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலையும் நேற்று ஆரம்பமானது என தெரியவருகின்றது. குமண கப்பலின் பொருள்கள் இறக்கப்பட்ட பின்னர் நோயாளர்களை குமண மூலம் கொழும்புக்கு கொண்டுசெல்ல ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. (நி,க)

## 2000 மெற்றிக்தொன் அரிசி குமண கப்பலில் வந்தது

[வடமராட்சி]

பருத்தித்துறை இறங்கு துறைக்கு 'குமண' கப்பல் நேற்றுக்காலை 10.00மணிக்கு வந்து சேர்ந்தது. இக்கப்பலில் பின்வரும்பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

அரிசி 2000மெற்றிக்தொன், மா 450 மெற்றிக் தொன், சீனி 200 மெற்றிக் தொன், பால்மா 100 மெற்றிக்தொன், சவர்க்காரம் 20 மெட்றிக் தொன், டீசல் 29 பரல்கள், மண்ணெண்ணெய்20பரல்கள், பருப்பு 30 மெற்றிக் தொன், பயறு 50 மெற்றிக்தொன், ஆகியனவும்,

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு டீசல், என்ஜின் ஓயில், மருந்து வகைகள், அரிசி, மா, சீனி, பருப்பு, பயறு போன்றவையும், யாழ். பல்கலைக்கழகத்திற்கென எரிபொருள்களும், கெயர் நிறுவனத்திற்கு எரிபொருளும், இலங்கை வங்கிக்கு எரிபொருளும், போருட் நிறுவனத்திற்கு பெற்றோல், என்ஜின் ஓயில், மண்ணெண்ணெய் மற்றும் மலத்தியோன் பவுடரும்,

மேலும் பருத்தித் துறை துறைமுகத் திருத்தத்திற்கென 50 சீமெந்து பைக்கற்றுக்களுடன் சிறுவர் பராமரிப்பு நிறுவனத்திற்கும் 75 சீமெந்து பைக்கற்றுக்களும் மற்றும் சிலவும் இக்கப்பலில் வந்துள்ளன. (யோ) (30)

## 1500 பரல் மண்ணெய் வந்தது கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம்

### குடும்பத்திற்கு 1 லீற்றர் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்துசேர்ந்த 'நில்கிரி' கப்பல்மூலம் 1500 பீப்பாய் மண்ணெண்ணெய் எடுத்துவரப்பட்டுள்ளது. இம் மண்ணெண்ணெய் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குடும்பத்திற்கு ஒரு லீற்றர் வீதம் விநியோகிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களைதத் தமக்குரியமண்ணெண்ணெயை பருத்தித்துறை இறங்குதுறையில் இன்று முதல் உடனடியாக நேரில் பெற்று விநியோகிக்குமாறு யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 1200 பீப்பாய் மண்ணெய் 10 தினங்களில் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான இரண்டாம் கட்ட மண்ணெய் இன்னும் பத்து தினங்களில் வந்து சேரும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது முதல் கட்டமாக பருத்தித்துறை இறங்கு துறையில் 1500 பரல் மண்ணெயை இறக்கும் நில்கிரி கப்பல் நாளை மறுதினம் மீண்டும் கொழும்பு நோக்கி புறப்படும் எனவும் அங்கிருந்து மீண்டும் 1200 பரல் மண்ணெய்யை ஏற்றிக் கொண்டு பத்துத் தினங்களில் இங்கு வரும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை இம்முறை நில்கிரி கப்பல் கொண்டு வர இருந்த இரண்டு பாஜ்களும் கொண்டுவரப்படவில்லை எனவும் அடுத்தமுறை வரும்போது இவை கொண்டு வரப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### சங்குப்பிட்டி இறங்குதுறைக்கு

## காலையில் வந்த ராணுவம் மதியம் முகாம் திரும்பியது

பூநகரிமுகாமிலிருந்து நேற்று காலை 6.30 மணியளவில் முன்னேறிவந்த இராணுவத்தினர் சங்குப்பிட்டி துறை வரை வந்தடைந்தனர்.

இவர்களுக்கு உதவியாக நான்கு விசைப்படகுகள் கடலில் காவல் செய்தன. உலங்கு வானூர்தி ஒன்றுதாழப்பறந்து பாதுகாப்பு வழங்கியது.

ஆனால் இப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் பகல் 11.30 மணியளவில் தாக்குதல் எதுவும் நடத்தாமல் முகாம் திரும்பினர்.

## முசல்குத்தியில் படை தரிப்பு பதவியாவில் 'புல்மூன்'

வவுனியா தென்மேற்கு திசையில் ஒபரேஷன் சத்தபகர எனும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மன்னார், மதவாச்சி வீதியில் செட்டிகுளம் ரயில் நிலையம் அருகிலும் முசல்குத்தி பகுதியிலும் முன்னணி பாதுகாப்பு நிலைகளை அமைத்துள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகத்தை சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந் நடவடிக்கையில் 1500 படையினர் ஈடுபடுத்தப்பட்டதாகவும் டாங்கிகள், நவீனரக ஆயுதங்கள் சகிதம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் வவுனியாவின் வட-கிழக்கு திசையில் பதவியாவிற்கு அருகில் ஒபரேஷன் 'புல் மூன்' என்னும் இராணுவ நடவடிக்கையில் கொமாண்டோப்படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நேற்று இரண்டாவது நாளாகவும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தது.

## பூவரசந்தீவுப் பகுதியில் விமானக் குண்டுத் தாக்கு

### கடற்படைப் படகை மீட்க முயற்சி?

(குருநகர்)

நேற்று காலை 7.30 மணியளவில் இரண்டு பொம்பர்கள், உலங்குவானூர்தி ஒன்று சுற்றி வேவுபார்க்க அரியாலை கிழக்கு பூநகரி - பூவரசந்தீவுக் குட்பட்ட பகுதிகளில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

பொம்பர்கள் நான்கு குண்டுகளை அப்பகுதியில் அடுத்தடுத்து வீசின.

சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான ரோந்துப் படகொன்று அப்பகுதியில் தரை தட்டியதை அடுத்து மீட்டுச் செல்ல மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டதாக ஊர்ஜிதம் அற்ற தகவல்கள் தெரிவித்தன.

நேற்று அதிகாலை அப்பகுதிகளில் கடற்படைப் படகுகள் காணப்பட்டதாகவும் பிற்பாடு அவை சென்றுவிட்டன வென்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

குண்டு வீச்சுக் காரணமாக ஏற்பட்ட சேதவிபரங்கள் கிடைக்கவில்லை. (21)

## சிறுவிளான் பகுதி வீடுகள் இராணுவத்தால் தகர்ப்பு

நேற்றுக்காலை 10.00 மணியளவில் சிறுவிளான் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மக்கள்இடம்பெயர்ந்திருந்த வீடுகளைக் குண்டுகள் வைத்துத் தகர்த்தனர் எனத் தெரியவருகிறது. பாரிய வெடிச்சத்தங்களை அடுத்து அப்பகுதி பெரும்புகைமண்டல

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்புலன்ஸ் செல்லத் தடை; நோயாளி 'பரிதாப மரணம்

கிளிநொச்சியிலிருந்து நோயாளிகளுடன் சென்ற அம்புலன்ஸ் வண்டியை வவுனியா தடைமுகாம் இராணுவத்தினர் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதி மறுத்ததினால் பெண் நோயாளி ஒருவர் பரிதாபகரமாக மரணமானார்.

நேற்று கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து இலங்கை செஞ்சிலுவை சங்க அம்புலன்ஸ் மூலம் 5 நோயாளர்கள் வவுனியா ஆஸ்பத்திரிக்கு மேலதிக சிகிச்சைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர்.

அம்புலன்ஸ் பயணத்தை தொடர வவுனியா தடைமுகாம் படையினர் அனுமதிக்காமையினால் வாகனம் திரும்பிவர வேண்டிய நிலை ஏற்பட்டது. வரும் வழியில் நோயாளிகளில் ஒருவரான இரவீந்திரா சரஸ்வதி என்பவர் மரணமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. [16]

## ஹெலிரோந்து

(சுன்னாகம்)

நேற்று காலையிலிருந்து, வலிகாமம் வடக்குப் பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்று பரவலாக ரோந்து சென்றது. கடந்த சில தினங்களாக பலாலி விமான தளத்தில் வழக்கத்திற்கு மாறாக பல தடவைகள் விமானங்கள் வந்து இறங்கிச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

### அடுத்த மாதம் சார்க் மாநாடு

அடுத்த மாதம் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஏழாவது சார்க் மாநாடு நடைபெறுமென தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திகதிகளில் மாநாட்டை நடாத்த ஏழு சார்க் நாடுகளின் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஏழாவது சார்க் உச்சி மாநாடு ஏற்கனவே இருமுறை ஒத்திவைக்கப்பட்டமை தெரிந்ததே.

## பெரியபண்டிவிரிச்சானில் அகோரக் குண்டு வீச்சு

### கட்டடங்கள் பல நாசம்

[மன்னார்]

மன்னார் மாவட்டம் பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் அனைத்துலக மகளிர் தினமான நேற்று முன்தினம் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தின.

மூன்று குண்டுவீச்சு விமானங்களும் உலங்குவானூர்தியும் காலை 9.10 மணியளவில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் மூன்று தடவைகளில் மொத்தம் ஆறு குண்டுகளை வீசித்தள்ளின. உலங்குவானூர்தியொன்று 30 நிமிடங்கள்வரை துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. இத் தாக்குதல்களால் நான்கு கட்டடங்கள் சேதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து கட்டையடம்பன் மடுறோட் ஆகிய பகுதிகளில் எட்டுக் குண்டுகள் வீசப்பட்டன. உலங்குவானூர்தியும் தாக்குதலை நடாத்தியது. இத் தாக்குதலில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

பின்னர் 11.30மணியளவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### பாலராசிரியராக....

பாலராசிரியராக வர சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளலாம். நேரில் வரமுடியாதோர் தபால்வழியிலும் பயிலலாம். க.பொ.த. (சா த) கடைசித் தகைமை ஆகும் வரும் சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்குச் சந்தித்தும் ஆவனசெய்யலாம்.

பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: உயர்கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி -யாழ்ப்பாணம்.

(4436)


### ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

[தென்மராட்சி]

ஒரு தொகைப்பணமும் பெயர் அழிந்த நிலையில் காணப்படும் ஒரு அடையாள அட்டையும் கிளாலிக்கும் பண்டிதர் குடியிருப்பு முகாமுக்கும் இடையில் பொதுமக்களால்கண்டெடுக்கப்பட்டு பண்டிதர் குடியிருப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளவும். [86]

### பண்ணிசைப் போட்டி முடிவுகள்

மருதனார்மடம் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றது. குழு நிகழ்ச்சிகளில், பாலர் பிரிவில் நாகேஸ்வரி வித்தியாலயமும், ஆரம்ப பிரிவில், நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையும், நவாலி சென். பீற்றேஸ் றோ. க.த.க. பாடசாலையும், கீழ்ப்பிரிவில் சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலயமும், ஏழாலை மேற்கு சன்மார்க்க வித்தியாலயமும், கனிஷ்ட இடைநிலை பிரிவில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப்பாடசாலையும், இராமநாதன் கல்லூரியும், சிரேஷ்ட இடைநிலை மட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியும் முறையே ஆண், பெண் பிரிவுகளில் முதலிடங்களைப் பெற்றன. மேல்நிலைப் பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது.

(11) (09)

### பொலீஸார் கைது

(கொழும்பு)

திருமலையைச் சேர்ந்த ஒரு

# உதவிவழங்கலில் பாரபட்சம் காரைநகர் மக்கள் புகார்

[யாழ்ப்பாணம்]

நிவாரண உதவிகள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக காரைநகர் நீலங்காடு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ் அரசாங்க அதிபரிடம் புகார் தெரிவித்துள்ளது.

காரைநகர் பகுதியைச்சேர்ந்தவர்களும், சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து முகாம்களில் வசிப்பவர்களுமான இம்மக்கள் நிவாரணம் வழங்கப்படும் விவகாரத்தில் தமக்குப் பாரபட்சம் காட்டப்படுவதாக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடம் புகார் செய்துள்ளனர். இது தொடர்பாக யாழ் அரசாங்க அதிபருக்கு அவர்கள் எழுதியுள்ள கடிதமொன்றில் மேலும் தெரிவித்திருப்பதாவது: முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு தண்ணீர் எடுக்கும் குடங்களை சிறுவர் பாதுகாப்பு நிதியம் அன்பளிப்பாக வழங்கிய போதும் முகாம் நிர்வாகிகள் இருபத்தைந்து ரூபா அறவிடுவதாகவும், அதிலும் சிலர் புறக்கணிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். இத்தகைய பாதிப்பினால் முகாம்களில் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் உளத்தாக்கத்திற்கு இலக்காவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### இராணுவத்தினர் பிணையில் விடுதலை

எண்பது இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளை மோசடி செய்ததாகக் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் மூவரையும் பிணையில் செல்ல கொழும்பு கோட்டை மேலதிக நீதிபதி அனுமதித்தார்.

இராணுவ நலன் புரிச்சங்கம் வடக்கு கிழக்கு யுத்த முனைக்கு அனுப்புவதற்காக வைத்திருந்த சிகரெட்டுக்களைக் கையாடி, அனுராதபுர வியாபாரிகளுக்கு விற்கப்பட்டது தொடர்பாகவே இவர்கள் பொலீஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினால்கைது செய்யப்பட்டனர்.

## கலைப்பீட மாணவருக்கு கணிதம் கற்பிக்க பணிப்பு

[யாழ்ப்பாணம்]

அடுத்த புதிய கல்வியாண்டில் [1992-93] முதலாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கு கணிதப்பாடம் கற்பிக்கப்பட வேண்டும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சகல பல்கலைக் கழகங்களையும் சுற்று நிருபம் மூலம் கேட்டுள்ளது.

முதலாம் வருடத்தில் கணிதப் பாடத்தில் சித்தி பெறுபவர்களே பொருளியல், மற்றும் அரசியலில் சிறப்புக் கலைக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

இத்திட்டம் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் சகல பல்கலைக்கழகங்களும் கடைப்பிடித்து வந்த இத்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

எனினும் பொருளியல், அரசியல் சிறப்புக் கலைபட்டதாரி மாணவர்களின் நன்மை கருதி இத்திட்டம் அடுத்த வருடம் முதல் அமுலுக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[05]

## தபால்பொதி மோசடி பற்றி கூட்டுவிசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

வெளிநாட்டு தபால் பொதிகளில் நடந்த மோசடிகள் தொடர்பாக சிறிலங்காகாவல் துறையினரும் சுங்கப்பகுதியினரும் தபால் திணைக்களத்தினரும் இணைந்து கூட்டாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வெளிநாட்டுத்தபால் பொதிகள் வழங்கும் பிரிவிலிருந்து மோசடியான முறையில் விநியோகிக்கப்பட்ட சிங்கப்பூரிலிருந்து வந்த 13 பொதிகள் குறித்தே விசாரணை நடைபெறுகிறது.

சிங்கப்பூரிலிருந்து போலி முகவர்களுக்கு வந்த இந்த பொதிகள் ஏஜென்டுகள்மூலம் எந்தவிதமான சுங்கத்தீர்வையுமின்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் சுமார் 20 கிலோ நிறையுடைய இவ் பொதிகளுக்குள் பலகோடி ரூபா பெறுமதியான பொருள்கள் இருந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாக சுங்கப் பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை நான்கு அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தீவகப் பிரதேச செயலகங்கள் ஒன்றிணைந்து நடாத்தும் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணியளவில் வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்குகொள்ளும் கழகங்களின் பிரதிநிதிகள் தவறாது சமுகமளிக்கவும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## மாகாணசபைத் தேர்தல்; உத்தியோகத்தர் தெரிவு

[கொழும்பு]

மாகாணசபைத் தேர்தல்களை இந்த ஆண்டில் நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் தயாராகி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன மாகாணசபைத் தேர்தல்களில் ஈடுபடுவதற்கான அரசாங்க உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான சுற்று நிருபங்களை தேர்தல் திணைக்களம் அனுப்பி வைத்திருப்பதாக அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.


## கம்பியூட்டர் கல்வி

❋ BASIC ❋ dBASE III+ ❋ LOTUS 1-2-3

❋ WORD STAR 5·5 ❋ PASCAL

## புதியவகுப்புக்கள் ஆரம்பம்

திங்கள், புதன், வெள்ளி 12-03-93

சனி, ஞாயிறு 13-03-93

★ O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
★ உத்தியோகத்தர்களுக்கான விசேட மாலை நேர, விடுமுறை கால வகுப்புக்கள் நடைபெறுகிறது.
★ கூடியநேர செய்முறை பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

தனிப்பட்ட முறையில் கம்பியூட்டர் பயில விரும்புவோர் எந்நாட்களிலும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:


## காணவில்லை





கைதடி நுணாவலை பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஏகாம்பரம் என்பவரையும் அதே இடத்தைச் சேர்ந்த கெங்காதரன்-சௌந்தலராணிஎனும் பெண்மணியையும் 21-2-93 ஞாயிற்றுக்கிழமையில் இருந்து காணவில்லை.

இவர்கள் இருவரும் ஆலங்கேணியில் நின்று வள்ளத்தில் ஞாயிறு இரவு 7-00 மணியளவில் வந்ததாகவும் இருவரும் இன்றுவரை வீடுவந்து சேரவில்லை. கண்டவர்கள் மேற்படி விலாசத்திற்கு அறியத்தரவும்.

தகவல்:
மனைவி: எ. செல்வராணியும்,
(4438) உற்றார், உறவினர்களும்


ஆசிரியர்/அரசாங்க ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வரவுச் சான்றிதழ் படிவம் இன்றுமுதல் விற்பனைக்கு வரும்.

பாரதி பதிப்பகம்
A B. PRINTERS
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06 - 01 - 1956

மறைவு
04 - 03 - 1991

திதி:
10 - 03 - 1993

திருமதி

## யோகமணி யோகேந்திரன்

(ஆசிரியை,யாழ்/அல்வாய் சின்னத்தம்பிவித்தியாலயம்

ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி -நீ சென்று
ஆண்டு இரண்டு போனாலும்
மாறாது உன் நினைவு - என்றும்
ஆறாது எம் மனது

உன் நினைவில் வாழும்
கணவன், மகன்மார், மகள், அம்மா,
ஐயா, அண்ணா, அக்காமார், தங்கைகள்
மைத்துனன், மைத்துனி, பெறாமக்கள்,
மருமக்கள்.

பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை.

(4435)

## நினைவு கூருகின்றோம்...

1993-03-10

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலயமும், ஏழாலை மேற்கு சன்மார்க்க வித்தியாலயமும், கனிஷ்ட இடைநிலை பிரிவில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப்பாடசாலையும், இராமநாதன் கல்லூரியும், சிரேஷ்ட இடைநிலை மட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியும் முறையே ஆண், பெண் பிரிவுகளில் முதலிடங்களைப் பெற்றன. மேல்நிலைப் பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது.

(11) (09)

## பொலீஸார் கைது

(கொழும்பு)

திருமலையைச் சேர்ந்த ஒரு முதியவரிடமிருந்து ஆயிரம் ரூபா கைலஞ்சம் பெற்றனர் என்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து கொட்டாஞ்சேனைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு சப்-இன்ஸ்பெக்டர், இரண்டு பொலீஸார் மற்றும் ரிஷேர்வ் பொலீஸ் ஒருவரைக் கிறான்ட பாஸ் பொலீஸ் கைது செய்துள்ளது

ஓட்டோ ஒன்றில் பயணம் செய்த முதியவரை வழி மறித்து ஆயிரம் ரூபா தந்தால் தான் பயணத்தைத் தொடர அனுமதிக்க முடியும் என்று கூறி லஞ்சமாக ஆயிரம் ரூபா பெற்றனர் என்றமுறைப்பாட்டைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## மீனவர்களின் உடைமைகளை மீளளிக்க மறுப்பு

[வடமராட்சி]

பூநகரிகடற்பரப்பில் வைத்து பிடிக்கப்பட்ட ஒன்றரை இலட்சம் ரூபாபெறுமதியான வலை, வள்ளம், என்ஜின் ஆகியவற்றைமீளளிக்கராணுவம்மறுத்துள்ளதாக நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்ட மன்னாரைச் சேர்ந்த ஆறுமுகம் - கதிரமலை தெரிவித்தார்.

கடற்படையினர் கடல் தொழிலில்ஈடுபட்டிருந்த மேற்படி மீனவரையும் அவரது உறவினரான நாகமுத்து-சக்திவேல் என்பவரையும் கைது செய்து கூட்டிச்சென்றவேளையில் அவர்களது மீனவ மூல வளங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இவர்களை விடுவிக்கும் போது தமது தொழில் மூல வளங்களைத் தருமாறு கேட்டதற்கு இராணுவம் மறுத்து விட்டதாக விடுவிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

---


## கம்பியூட்டர் கல்வி

❋ BASIC ❋ dBASE III+ ❋ LOTUS 1-2-3
❋ WORD STAR 5·5 ❋ PASCAL

## புதியவகுப்புக்கள் ஆரம்பம்

திங்கள், புதன், வெள்ளி 12-03-93
சனி, ஞாயிறு 13-03-93

★ O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
★ உத்தியோகத்தர்களுக்கான விசேட மாலை நேர, விடுமுறை கால வகுப்புக்கள் நடைபெறுகிறது.
★ கூடியநேர செய்முறை பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

தனிப்பட்ட முறையில் கம்பியூட்டர் பயில விரும்புவோர் எந்நாட்களிலும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:



**UNIKCO COMPUTER CENTER**

37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[வெலிங்டன் சந்திக்கு வடக்குப்புறமாக மேல்மாடியில்]

(சி/6161)


---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு
10-10-1961

மண்ணில் மறைவு
10-3-1988

## அருணாசலம் அருணகிரிநாதன் [கிரி]

கல்லறையில் உமைவைத்து கண்ணீரால்
நனைத்திட்டோம் உலகில் வைக்க
இயலாமல் உள்ளத்தில் வைத்து உருகிறோம்
நீ தான் இன்றில்லை எம்முடம்
உன் நினைவுகளாவது எம்முடன் மிஞ்சட்டுமே

உனது இழப்பால் துயருறும்
அப்பா, அம்மா, அக்காமார், தங்கைமார்,
தம்பிமார், அத்தான்மார், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

கல்லுவம், கரவெட்டி. (4433)

---

கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஏகாம்பரம் என்பவரையும் அதே இடத்தைச் சேர்ந்த கெங்காதரன்-சௌந்தலராணிஎனும் பெண்மணியையும் 21-2-93 ஞாயிற்றுக்கிழமையில் இருந்து காணவில்லை.

இவர்கள் இருவரும் ஆலங்கேணியில் நின்று வள்ளத்தில் ஞாயிறு இரவு 7-00 மணியளவில் வந்ததாகவும் இருவரும் இன்றுவரை வீடுவந்து சேரவில்லை. கண்டவர்கள் மேற்படி விலாசத்திற்கு அறியத்தரவும்.

தகவல்:
மனைவி: எ. செல்வராணியும்,
உற்றார், உறவினர்களும்

(4438)

---


ஆசிரியர்/அரசாங்க ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வரவுச் சான்றிதழ் படிவம் இன்றுமுதல் விற்பனைக்கு வரும்.

பாரதி பதிப்பகம்
**A B. PRINTERS**
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

குமார் அச்சகம்
பருத்தித்துறை.

(சி-6167)


---

## 1-வதுபிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் செ. பிறேம்நாத்

இமையாணன் கிழக்கு கலைமகள் வீதி, செல்வநேசன் ராஜினி தம்பதிகளின் புதல்வன் பிறேம்நாத் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (10-03-93) கொண்டாடுகின்றார்.

இவர் நீடூழி வாழ, அப்பா, அம்மா, றஜனிக்கா, கோபிநாத் ஆகியோரும் உற்றார், உறவினர்களும் வாழ்த்துகிறார்கள். (சி/6168)

---

## 1-ம் ஆண்டு நிறைவு



பிறப்பு
16-03-1971

இறப்பு
20-02-1992

## அருமைநாயகம் பிறேமதாசன்

நிழல் தருவாய் என இருந்தோம் ஆனால்
அழவிட்டுச் சென்றாயே - அருமை மைந்தா!
எழுந்து வரமாட்டாயா - எம்
விழிநீரைத் துடைப்பதற்கு

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

ஏழாலை வடக்கு
ஏழாலை.

(4374)

---

திருமதி

## யோகமணி யோகேந்திரன்

(ஆசிரியை,யாழ்/அல்வாய் சின்னத்தம்பிவித்தியாலயம்

ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி -நீ சென்று
ஆண்டு இரண்டு போனாலும்
மாறாது உன் நினைவு - என்றும்
ஆறாது எம் மனது

உன் நினைவில் வாழும்
கணவன், மகன்மார், மகள், அம்மா,
ஐயா, அண்ணா, அக்காமார், தங்கைகள்
மைத்துனன், மைத்துனி, பெறாமக்கள்,
மருமக்கள்.

பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை.

(4435)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-10

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - காங்கேசன்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தட்டி ''வான்'' ஓட்டுநரான பருத்தித்துறை திக்கத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன்.

1986 ஆம் ஆண்டு மட்டு - கல்லடி, உப்போடைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**லெப். ரவிக்குமார்** [நாகேஷ் யோகராசா - உப்போடை, கல்லடி - மட்டு.]

**அன்ரனி** [உப்போடை, கல்லடி - மட்டு.]

முல்லை - மாங்குளம், துணுக்காய், வேட்டையடைப்பு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். பெரியதம்பி** [சிவலிங்கம் மதியழகன்- சூசைப்பிள்ளையார் குளம் - வவுனியா]

**கருணை** [ஆறுமுகம் பாஸ்கரன் - நெட்டாங்கண்டல் வவுனிக்குளம், மாங்குளம் - முல்லை.]

மட்டு - உன்னிச்சைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி - நொச்சிமுனைப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு அம்பாறை - காரைதீவுப் பகுதியில் தேசவிரோதக் குழுவினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**மகேஷ்** [பாலகிருஷ்ணன் மகேஸ்வரன் - ஆர். கே. எம். வீதி, காரைதீவு - 01 - அம்பாறை]

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி - வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ரமேஷ்** [பசுபதி மணிவண்ணன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி]

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் உழவு இயந்திரத்தில் வந்து கொண்டிருந்த போது இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்கள்

1991 ஆம் ஆண்டு வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பிறேம்** [சிவலிங்கம் உதயகுமார் - சல்லிக்குளம் - வவுனியா]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கூலித் தொழிலாளியான தளவாயைச் சேர்ந்த தமிழிளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6166)

நல்லூர் [illegible] யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

தங்களைத் தவிர, பின்பற்றுவதற்கு மாதிரி வேறு எதுவுமில்லாத மக்கள், திருந்தி மேம்படுவதுஅரிது
-ஒலிவர் கோல்ஸ்ட்மத்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

# பிரேமாவின் மழுப்பல்

"மாட்டைப் பற்றி எழுதச் சொன்னால் - அது புரியாவிட்டால், - மாட்டைக் கொண்டு போய் மரத்தில் கட்டிவிட்டு மரத்தைப் பற்றி எழுதுவது தானே" இது எனது ஆசிரியரும், நண்பருமான ஒருவர் பகிடியாகக் கூறிய ஒரு வாக்கியமாகும். கடந்த 7 ஆம் திகதி இரவு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தொலைபேசியில் பி.பி. ஸிக்கு அளித்த பேட்டியும் இதே போன்றே இருந்தது. மாட்டைப் பற்றி எழுதச் சொன்னதற்கு மரத்தைப் பற்றி எழுதியதாகவே அது இருந்தது.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இப்பேட்டியில் சகல தரப்பு கேள்விகளுக்கும் பிரேமதாசாவின் பதில் அவ்வாறானதாகவே இருந்தது. இதில் தலைவர் பிரபாகரனின் சமஷ்டி குறித்த அறிவிப்பிற்குமான பதிலும் அவ்வாறே இருந்தது. சமஷ்டி அமைப்பொன்று முன்வைக்கப்பட்டால் அதைப் பரிசீலனை செய்யத் தயார் என்ற அறிவிப்பிற்கு "சிறிலங்கா அரசியல் யாப்பு சிறிலங்கா ஒருங்கிணைந்த ஒற்றையாட்சி நாடு என்பதை வலியுறுத்துகின்றது. எனவே அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டுமானால், அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் வேண்டும். பொதுசன வாக்கெடுப்பில் மக்களின் ஒப்புதல் பெரும்பான்மையாக இருக்க வேண்டும்" எனப் பதில் கூறியுள்ளார்.

அதாவது தலைவர் பிரபாகரனின் கேள்விக்கு தனது நிலைப்பாடு என்ன - இதுவே கேள்வியாகும் - என்பதற்கு பதில் கூறாமல் சிங்கள மக்களின் நிலைப்பாடு எப்படியாக இருக்க வேண்டும் என திரு. பிரேமதாசா விளக்கம் தெரிவித்துள்ளார், அவ்வாறானால் இதுவரை தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசாங்கம் கட்டவிழ்த்து விட்ட அநீதிகளும், கொடுமைகளும், அடக்குமுறைகளும் சிங்கள மக்களிடம் தேர்தல் மூலம் பெறப்பட்ட அங்கீகாரத்தினாலா? அன்றி சர்வசன வாக்கெடுப்பில் கிடைக்கப் பெற்ற அனுமதியினாலா நடைபெற்றது என்பதைச் சிறிலங்கா ஜனாதிபதி கூறுவாரா?

மேலும் சிறிலங்கா அரசியலமைப்பு ஒற்றையாட்சி அமைப்பென்றால் அது என்ன மாற்ற முடியாததா? தேவைகள் எதுவுமின்றி தமது அரசியல் அதிகாரங்களைத் தக்க வைத்துக் கொள்

## தமிழ்த்திறன் போட்டி

(தென்மராட்சி)

யா/உசன்இராமநாதன் மகா வித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை அதிபர் திரு. க. பேரம்பலம் தலைமையில் தமிழ்த்திறன் போட்டி நடைபெறும். இதற்கு சிறப்பு விருந்தினராக யா/ வைத்தீஸ்வர கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு. சி.சரவணபவான் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். [86]

## உடற்பயிற்சிப் போட்டி

கொடிகாமம் கொத்தணிப் பாடசாலைகளின் உடற்பயிற்சி போட்டி 25-02-93 யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு. த. கந்தையா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. (86)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித றோக் றோ. க. வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி. ப. 2 மணிக்கு புனித றோக் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற உள்ளது யாழ். கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி. வேலாயுதம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ். பேராலய பங்குத்தந்தை வண எஸ். எச். செபநேசன் கொத்தணி அதிபர் திருமதி எஸ். சின்னத்துரை, யாழ். கல்விக் கோட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் இதயன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

★ ★

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி வியாழக்கிழமை 11-3-93 2.00 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். சிறப்பு விருந்திரோர்களாகஉடற்கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜாவும்,விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு யாழ். கோட்டப் பொறுப்பாளர் இதயன் அவர்களும் கலந்து கொள்ள இருக்கிறார்கள். (42)

★ ★

கொடிகாமம் கொத்தணி பாடசாலை மட்டத்திலான தமிழ்த்திறன் போட்டி சென்ற 2-ம் 3-ம் திகதிகளில் யாழ். மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு. த. கந்தையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. (86)

## விபரம் சேகரிப்பு

1994ஆம் ஆண்டிற்கான சீருடைகளை மாணவர்களுக்கு வழங்குவது தொடர்பாக

# குழந்தையின்மூளைவிருத்தி; போசாக்குணவு அவசியம்

உங்கள் குழந்தைகளின் மூளை வளர்ச்சி பெற வேண்டுமாயின் அவர்களுக்கு ஐந்து வயதாகும் முன்னர் தகுந்த போசாக்கூட்ட வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் நல்ல புத்திக் கூர்மையுடனும், ஆரோக்கியத்துடனும் திகழுவார்கள். இவ்வாறு கொட்டடி றீகன் நகர் சிகிச்சை நிலையத்தில் பள்ளிமுன்னிலை பிள்ளைகளின் போசாக்கு பற்றிய கருத்தரங்கில் டாக்டர் தெய்வேந்திரா எடுத்துரைத்தார்.

உங்கள் பிள்ளைகள் அறிவாளிகளாகவும், ஆரோக்கியமானவர்களாகவும் உருவாக வேண்டுமானால் அவர்களுக்கு ஐந்து வயதாகு முன்னர் தகுந்த போசாக்கு வழங்கப்பட வேண்டும். அதன் பின் அவர்களுக்கு போசாக்கூட்டலாம் என எண்ணிக் காலம் தாழ்த்தினால் பின் வருந்த வேண்டி வரும். ஆரோக்கியமாக குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு நோய்கள்வராது. ஆரோக்கியம் குன்றிய பிள்ளைகளே நோய்களின் தாக்கத்திற்கு உட்படுகிறார்கள். எனவே நோயினால் குழந்தைகள் பீடிக்கப்பட்ட பின் அவர்களுக்கு செலவிடுவதைவிட அவர்களுக்கு தகுந்த போசாக்கை ஊட்டி வளர்க்க வேண்டும். அப்போது அவர்கள் நோயின்றி வாழ்வதுடன் வீட்டுக்கோ அன்றி நாட்டுக்கோ பாரமானவர்களாக இருக்காது வீட்டுக்கும், நாட்டிற்கும் பிரயோசனமானவர்களாவார்கள்.

இன்று போர்க்காலச் சூழல் காரணமாக பல குழந்தைகளின் பெற்றோர் தொழில் பாதிப்புற்று வருமானம் அற்றவர்களாக இருக்கின்றார்கள். இதைக் கருத்திற் கொண்டு சிறுவர், கர்ப்பிணிகள் போசாக்கு மையங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன ஆனால் இவற்றிற்கு செல்லும்படி குழந்தையின் போசாக்கை ஆராய்ந்து குடும்ப நல சேவை நிலையங்களும், ஏனைய சிறுவர் நல அமைப்புகளும் பணித்தபோதும் அநேகமானோர் இந்நிலையங்களுக்கு செல்வதில்லை.

கொக்குவில் பகுதியில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் இரவு பகலாக சத்துணவூட்டும் நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார்கள். இதே போன்று கொட்டடியிலும் சிறுவர் போசாக்கு மையம் ஒன்று உருவாக்கப்பட்டு பகல் வேளைகளில் சிறுவர்களுக்கு போசாக்கூட்டப்படுகிறது. இப்படியான வசதிகள் இருந்தும் இவற்றை ஏனோ பயன்படுத்த அனேகர் முன்வருகிறார்கள் இல்லை. இதே போன்றே நிறைகுறைந்த பிள்ளைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் குடும்ப நல சுகாதார நிலையங்கள் திறிபோசா, ஜீவாகாரம் போன்றவற்றை வழங்குகின்றன. இவற்றையும் அக்குழந்தைகளின் பெற்றோர், கர்ப்பிணி தாய்மார் அநேகர் வந்து பெற்றுக்கொள்வதில்லை.

இவ்வாறு யுனிசெவ் நிறுவனத்தினரால் நடாத்தப்படும் நகர்ப்புற அடிப்படை சேவைகள் நிகழ்ச்சித்திட்டத்தின்படி றீகன் நகர் சிகிச்சை நிலையத்தில் நடைபெற்ற போசாக்கு கருத்தரங்கில் டாக்டர் தெய்வேந்திரா, சுகாதாரக்கல்வி அதிகாரி கு. சிவலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (சி)(நி)

போக்குவரத்து ஊழியர்

# சேமலாப நிதியைப் பெற ஐ.எல்.ஓ. உதவக் கோரிக்கை

[கொழும்பு]

மக்கள் மயமாக்கப்பட்ட சிறிலங்கா போக்குவரத்து ஊழியர்களின் சேமலாப நிதியைப் பெற்றுத்தருமாறு கோரி சிறிலங்கா மோட்டார் தொழிலாளர் சங்கம் ஜெனிவாவில் உள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐ.எல்.ஓ) உதவியை நாடியுள்ளது.

1990 இல் சிறிலங்கா போக்குவரத்துச்சபை மற்றும் பிராந்திய போக்குவரத்துக் கழகம் மக்கள்மயமாக்கப்பட்டபோது 30,000ஊழியர்கள் தொழிலை இழந்தனர். இவர்களுக்கான ஊழியர் சேமலாபநிதி சுமார் 3,000 மில்லியன் ரூபா இதுவரை வழங்கப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சேமலாப நிதிக் கொடுப்பனவை அரசு ஊழியர்களுக்கு வழங்காது இருப்பதுதொழிற்சங்க சட்டங்களுக்குவிரோதமானது என்று சிறிலங்கா மோட்டார் தொழிலாளர் சங்கத்தலைவர் கீதாஞ்சன குணவர்த்தன தெரிவித்தார். கொழும்பில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்காததால்தாம் ஐ.எல்.ஓவின் உதவியை நாடியிருப்பதாகவும் அவர் கூறினார்.

# வவுனியா கிராமங்களில் கல்வித்தரம் வீழ்ச்சி

(வவுனியா)

வவுனியா கிராமப்புறப் பாடசாலைகளில் அடிப்படை வசதி அற்ற காரணத்தினால் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துள்ளது. கல்வித் திணைக்கள அதிகாரிகள் இதில் அக்கறையீனமாகக் காணப்படுகின்றனர்.

ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறைகளுடன் வேறு முக்கியமான அடிப்படை வசதிகள் அறவே இல்லாத நிலையில் மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

கல்வித் திணைக்களம் தொடர்ந்து கிராமப்புற பாடசாலை மாணவர்களைப் புறக்கணித்து வருவது சம்பந்தமாக பெற்றோர்கள் புகார் தெரிவித்துள்ளனர் (தி)

## உரிமையாளர் காயம்

இனிப்புப் பண்டங்கள் தயாரிப்பதற்காக காய்ச்சப்பட்ட சீனிப்பாணி தவறுதலாக ஊற்றுப்பட்டதனால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.ஞாயிறு நண்பகல் நாவற்குழி வாயிற்தோட்டம் பகுதியில் உள்ள இனிப்புப் பண்டங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

## வாலிபர் கைது

ஜாஎலயில் மட்டக்களப்பு வாலிபர் ஒருவர் விசேட பொலீஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு பாண்டிருப்பு பகுதியைச் சேர்ந்த கோணேஸ்வரன் குணசீலன் (18) என்பவரே கடந்த ஞாயிறன்று கைது செய்யப்பட்டிருக்கும் இளைஞராவார்.

# கொழும்பில் அரசை எதிர்த்து சத்தியாக்கிரகம் நடத்த

## திருட்டு

[வடமராட்சி]

பருத்தித்துறை இறங்குதுறை பொதிசுமக்கும் தனியர்ர்ஒன்றியஅலுவலகத்திலும் அருகில்உள்ள ராஜேஸ்வரிகபேயிலும் கடந்த வியாழக்கிழமை இரவு திருட்டுச்சம்பவங்கள் நடைபெற்றன.

தனியார் ஒன்றிய அலுவலகத்தின் கதவை உடைத்து உட்சென்ற திருடர்கள் அங்கிருந்து 10 லீற்றர் மண்ணெண்ணெயையும் ,20லீற்றர் கியர் ஓயிலையும் திருடியுள்ளனர். அருகில் இருந்த கபேக்குள் ½ மூடைசீனி,சிகரட்ஒருபண்டல், மற்றும் தின் பண்டங்களையும் சூறையாடியுள்ளனர். (யோ)

## உதவிப் பொருள் வழங்கல்

பச்சிலைப்பள்ளி சமுத்திரன் குடியிருப்பு மக்களுக்கு கிளிநொச்சி மாவட்ட பளைஉதவி அரசாங்க அதிபரினால் மண்வெட்டி, பாய், அரிவாள், அரிக்கன்லாம்பு, உடுபுடைவைகள் என்பன வழங்கப்பட்டதுடன், எழுபத்தி நான்கு குடிசைகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் உதவிகளை வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் குடியிருப்புப்பகுதிகளுக்கு விஜயம் மேற்கொள்ள இருப்பதாகவும் கூறப்படுகிறது. [86]

## கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவும் வகையில் சாவகச்சேரியில் கிளை ஒன்றைத் திறந்துள்ளது.

தெல்லிப்பழையில் இருந்து பலர் இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் குடியேறி இருப்பதால், அவர்கள் பங்கீட்டுப் பொருள்களை இலகுவில்பெற வழி செய்வதற்காகவே இக்கிளை நிறுவப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 'உளவாளிகள்' வீதி நாடகம்

(குருநகர்)

நாட்டில் உளவாளிகள் செயற்பாடுகளை மக்களுக்கு விளக்கிக் கூறும் வீதி நாடகமொன்றை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் ஊரெங்கும் நடத்தி வருகிறது. "உளவாளிகள்" என்னும் வீதி நாடகம் நேற்று பகல் 1.30 மணியளவில் குருநகர் பகுதியில் நடித்துக் காட்டப்பட்டது. (21)

## தலைமைத்துவபயிற்சி கருத்தரங்கு

ஈழநாதம் நிறுவனத்துடன் இணைந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நடத்தும் மாணவர் தலைமைத்துவப் பயிற்சிக்கான இருநாள் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமையும்,ஞாயிற்றுக்கிழமையும்

வாக்கெடுப்பில் மக்களின் ஒப்புதல் பெரும்பான்மையாக இருக்க வேண்டும்'' எனப் பதில் கூறியுள்ளார்.

அதாவது தலைவர் பிரபாகரனின் கேள்விக்கு தனது நிலைப்பாடு என்ன - இதுவே கேள்வியாகும் - என்பதற்கு பதில் கூறாமல் சிங்கள மக்களின் நிலைப்பாடு எப்படியாக இருக்க வேண்டும் என திரு. பிரேமதாசா விளக்கம் தெரிவித்துள்ளார், அவ்வாறானால் இதுவரை தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசாங்கம் கட்டவிழ்த்து விட்ட அநீதிகளும், கொடுமைகளும், அடக்குமுறைகளும் சிங்கள மக்களிடம் தேர்தல் மூலம் பெறப்பட்ட அங்கீகாரத்தினாலா? அன்றி சர்வசன வாக்கெடுப்பில் கிடைக்கப் பெற்ற அனுமதியினாலா நடைபெற்றது என்பதைச் சிறிலங்கா ஜனாதிபதி கூறுவாரா?

மேலும் சிறிலங்கா அரசியலமைப்பு ஒற்றையாட்சி அமைப்பென்றால் அது என்ன மாற்ற முடியாததா? தேவைகள் எதுவுமின்றி தமது அரசியல் அதிகாரங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காகமட்டுமே அரசியல்அமைப்புயாப்புக்களை சிங்கள அரசுகள் மாற்றியுள்ளன. 1972 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், 1978 இல் ஐக்கிய தேசியக் கட்சியும் இவ்வாறு செய்துள்ளன. ஆனால் இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள பெரும் நெருக்கடி ஒன்றைத் தீர்த்து வைக்க அரசியல் யாப்பை மாற்ற அரசாங்கம் ஏன் முயற்சிக்கக் கூடாது? ஒற்றையாட்சி முறை மட்டும் தான் ஜனநாயகமா? சமஷ்டி ஆட்சி முறை என்றால் அது ஜனநாயகமில்லையா?

உலகில் இன்று தேசிய இனங்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமஷ்டி அமைப்பிற்கு அப்பாலும் செல்ல அரசுகள் தயாராகியுள்ள வேளையில் சமஷ்டி மூலம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள பிரேமதாசா ஏன் முற்படக்கூடாது?

சமஷ்டி முறை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் விரும்பினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதற்கும், சர்வசன வாக்கெடுப்பில் வெற்றி பெறவும் முயற்சிக்கலாமே. தமது பதவிக் காலத்தை நீடிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஒரு கருத்துக் கணிப்பை நடத்தவும், அதற்கு ஆதரவாகப் பிரசாரம் செய்து வெற்றி பெற முடியும் என்றால், மக்களின் பாதுகாவலன் தானே எனவும், சிங்கள மக்களின் தன்னிகரில்லாத் தலைவன் தானே எனவும் கூறிக் கொள்ளும் திரு. பிரேமதாசா ஏன் இலங்கையின் ஒருமைப்பாட்டை பேண ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்தவும், அதற்கு ஆதரவாக பிரசாரம் செய்யவும் ஏன் முன்வரக்கூடாது?

அதை விடுத்து பிரச்சினைக்குத் தீர்வு காண எந்தவித உருப்படியான முயற்சிகளையும் மேற்கொள்ளாமல் இராணுவ ஆளணி, தளபாட விருத்திக்கு பெரும் நிதியை ஒதுக்கிக் கொடுத்து விட்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவே அரசு முற்படுகின்றது எனக்கூறிக் கொள்வதும் எதுவித பரிசோதனை நடவடிக்கைகளும் இன்றி, சிங்களப் பேரினவாத சிந்தனைக்கு ஊக்கமும், ஒத்துழைப்பும் வழங்கிக் கொண்டு, சமஷ்டி அமைப்பிலான தீர்விற்கு சிங்கள மக்கள் எதிராகவுள்ளார்கள், சமஷ்டியை அங்கீகரிக்க மாட்டார்கள் எனக் கூறுவதும், அரசியல் வாதிகளின் பித்தலாட்டங்கள் ஆகும் சிங்கள மக்களின் பேரில் மேற்கொள்ளும் அரசியல் மோசடியுமாகும்.

தில் இடம்பெறும். சிறப்பு விருந்திரோர்களாகஉடற்கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜாவும்,விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு யாழ். கோட்டப் பொறுப்பாளர் இதயன் அவர்களும் கலந்து கொள்ள இருக்கிறார்கள். (42)

★ ★

கொடிகாமம் கொத்தணி பாடசாலை மட்டத்திலான தமிழ்த்திறன் போட்டி சென்ற 2-ம் 3-ம் திகதிகளில் யாழ். மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு. த. கந்தையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. (86)

### விபரம் சேகரிப்பு

1994ஆம் ஆண்டிற்கான சீருடைகளை மாணவர்களுக்கு வழங்குவது தொடர்பாக அனைத்து விபரங்களையும் இம் மாத முடிவுக்குள் அனுப்புமாறு அனைத்துப் பாடசாலை அதிபர்களும் கேட்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான பணிப்புரையைக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

### ஒளவையார் விழா

கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் அமைந்திருக்கும் சித்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 21ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமையன்று ஒளவையார் விழா நடைபெறவுள்ளது.

### இலக்கிய நிகழ்வு

சாளரம் வெளியீட்டாளர்கள் உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரியின் உயரதர மாணவர் மன்றத்தினரின் ஆதரவுடன் நடத்தும் இலக்கிய நிகழ்வு இன்று பி. ப. 3மணியளவில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி அரங்கில் நடைபெறும்.

### பரீட்சைக் கட்டணம் உயர்வு

(கொழும்பு)

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை விண்ணப்பக் கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் 150 ரூபாவில் இருந்து 200 ரூபாவாக உயர்த்தியுள்ளார். இக்கட்டணம் இந்த ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் அதேவேளை பரீட்சை விடைத்தாள் ஒன்றை மீள்பார்வை செய்யும் கட்டணம், ரூபா 75இல் இருந்து 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1993 க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையிலிருந்து இது அமுல்படுத்தப்படும்.

### பொது அறிவுப் போட்டி

ஈஸ்டர் தினவிழாவை முன்னிட்டு சுண்டுக்குளி சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கிடையே பொது அறிவுப்போட்டி ஒன்றை நடாத்த ஒழுங்கு செய்துள்ளனர். [24]

1990 இல் சிறிலங்கா போக்குவரத்துச்சபை மற்றும் பிராந்திய போக்குவரத்துக் கழகம் மக்கள்மயமாக்கப்பட்டபோது 30,000ஊழியர்கள் தொழிலை இழந்தனர். இவர்களுக்

தெரிவித்தார். கொழும்பில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்காததால்தாம் ஐ.எல்.ஓவின் உதவியை நாடியிருப்பதாகவும் அவர் கூறினார்.

## வவுனியா கிராமங்களில் கல்வித்தரம் வீழ்ச்சி

(வவுனியா)

வவுனியா கிராமப்புறப் பாடசாலைகளில் அடிப்படை வசதி அற்ற காரணத்தினால் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துள்ளது. கல்வித் திணைக்கள அதிகாரிகள் இதில் அக்கறையீனமாகக் காணப்படுகின்றனர்.

ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறைகளுடன் வேறு முக்கியமான அடிப்படை வசதிகள் அறவே இல்லாத நிலையில் மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கல்வித்திணைக்களம் தொடர்ந்து கிராமப்புற பாடசாலை மாணவர்களைப் புறக்கணித்து வருவது சம்பந்தமாக பெற்றோர்கள் புகார் தெரிவித்துள்ளனர் (தி)

### கொடித்தினம்

இந்துசமயப்பேரவை கைதடி சைவ சிறுவர் இல்லக் கொடித்தினம் இன்று யாழ். மாவட்டம் முழுவதிலும் நடைபெறும். கொடி விற்பனை வைபவ ரீதியாக கைதடி சைவ சிறுவர் இல்லத்தில் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா தலைமையில் நடைபெறும். கொடி விற்பனையை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆரம்பித்து வைப்பார்.

றுப்பட்டதனால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.ஞாயிறு நண்பகல் நாவற்குழி வாயிற்தோட்டம் பகுதியில் உள்ள இனிப்புப் பண்டங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

### வாலிபர் கைது

ஜாஎலயில் மட்டக்களப்பு வாலிபர் ஒருவர் விசேட பொலீஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு பாண்டிருப்பு பகுதியைச் சேர்ந்த கோணேஸ்வரன் குணசீலன் (18) என்பவரே கடந்த ஞாயிறன்று கைது செய்யப்பட்டிருக்கும் இளைஞராவார்.

கொழும்பில் அரசை எதிர்த்து

## சத்தியாக்கிரகம் நடத்த பத்திரிகையாளர் தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்காவில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை எதிர்த்து எதிர்வரும் 18-ம் திகதி கொழும்பு மாநகரில் சத்தியாக்கிரகம் நடைபெற உள்ளது.

கடந்த புதனன்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர்களின் கூட்டமொன்றில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. நாளை வியாழனன்று கோஷம் எழுப்பும் போராட்டம் ஒன்றையும் இவர்கள் நடத்த உள்ளனர்.

இதே வேளை நாளை வியாழன் முதல் ஒருவாரத்திற்கு உள்ளூராட்சி அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் முன்பாக மறியல் போராட்டம் நடத்துவதென எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் 18-ம்திகதியன்று நடைபெறவிருக்கும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பத்திரிகையாளர்களுடன், எதிர்க்கட்சியினரும், மாணவர் சங்கங்களும் தொழிற்சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது

### இலவச பரிசோதனை செய்யப்படும்

புற்றுநோய்த்தடுப்புசம்பந்தமான இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள வடமாகாண புற்றுநோய்த்தடுப்புச் சங்கத்தினால் வழங்கப்படுகின்றன. செவ்வாய், வியாழன், சனி,ஞாயிற்றுக் கிழமைகளில் பல்வைத்திய நிபுணரினால் வாய் பரிசோதனைசெய்யப்படுகின்றன் திங்கள், புதன் கிழமைகளில் பெண்களுக்கானமார்புநோய்ப் பரிசோதனையும்செய்யப்பட்டு வருகிறது. (42)

### உரையரங்கு

திருவள்ளுவர் மன்றம் நடாத்தும் உரையரங்கும் கலந்துரை யாடலும் என்ற நிகழ்வில் இன்று மாலை 4மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரியில் 'வள்ளுவர் காட்டும் கல்வி நெறி' என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. தி.கமலநாதன் (M.A Dip in Edu) உரையாற்றுவார்.

## பெண்களை மடமை பேசுவது எம் சமுதாயத்தில் உள்ளது

கல்லூரி அதிபர் உரை

[நமது நிருபர்]

பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு அகதிகளாக மயிர்க்கொட்டிப் புழுக்களாக வாழ்ந்த நிலைமாறி இன்று அழகான வண்ணத்துப் பூச்சிகளைப் போல சிறகு விரித்து உலகின் பரப்பிலே பறந்து திரிவதைக் காணுகின்ற ஒரு நிலை பெண் விடுதலைப் போராட்டத்தின்வேட்கையின் வெற்றி என்பதில் ஐயமில்லை என நேற்று முன்தினம் யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அனைத்துலக மகளிர் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வேம்படிமகளிர் கல்லூரி அதிபர் செல்வி ராஜரட்ணம் தெரிவித்தார்.

மேலும் பெண்களைமடமை பேசுவது இன்னமும் எமது சமுதாயத்திலேயே காணப்படுகிறது. இன்னும் வீடுகளிலே பெண்குழந்தைகள்கல்விஅறிவு பெறாது அடிப்படைக் கல்வி அறிவுதானும்பெறாது அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டு காணப்படுகின்றனர். இவை சமுதாயத்திலே வெளிவருவதில்லை என்றார்.

## சிங்களக் குடியேற்றத்திற்கு அறுநூறு வீடுகள் அமைப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய குடியேற்றத் திட்டம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் அறுநூறு வீடுகள் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இந் நடவடிக்கைக்கு தமிழ் மக்கள் மத்தியில் கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

தமிழ் மக்கள் இராணுவ அச்சம் காரணமாக கைவிட்டுச் சென்ற நிலங்களிலேயே இந்த புதிய வீட்டுத் திட்டம் அமைக்கும் வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

வீரபுரம், முதலியார் குளம் ஆகிய இரு கிராமங்களிலும் இந்த வீடுகள் அமைக்கும் வேலைகள்தொடங்கப்பட்டுள்ளன. (தி)

### வீதி நாடகம்

(குருநகர்)

நாட்டில் உளவாளிகள் செயற்பாடுகளை மக்களுக்கு விளக்கிக் கூறும் வீதி நாடகமொன்றை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் ஊரெங்கும் நடத்தி வருகிறது. "உளவாளிகள்'' என்னும் வீதி நாடகம் நேற்று பகல் 1.30 மணியளவில் குருநகர் பகுதியில் நடித்துக் காட்டப்பட்டது. (21)

### தலைமைத்துவபயிற்சி கருத்தரங்கு

ஈழநாதம் நிறுவனத்துடன் இணைந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நடத்தும் மாணவர் தலைமைத்துவப் பயிற்சிக்கான இருநாள் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமையும்,ஞாயிற்றுக்கிழமையும் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த இருநாள் கருத்தரங்கில் விரிவுரைகளும், செயலமர்வுகளும் இடம் பெறவுள்ளன.

## 10 கோடி நிதி உதவி

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட வடகிழக்கில் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் பத்து கோடி ரூபாவை சிறிலங்கா அரசுக்கு வழங்கியுள்ளது.

இப்பணம் வடக்கு, கிழக்கு பகுதிகளின் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படும் என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

முதற்கட்டமாக மேற்படி பகுதிகளில் சுமார் நூறு பாடசாலைக்கட்டடங்களைஅமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முகவர்கள் இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் வெளிநாட்டு முகவர்களின் வீடுகளுக்கு முன்னால் ஏமாற்றமடைந்த தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்காக நீண்ட கியூ வரிசையில் தினமும் நிற்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் இவர்களது நெருக்கடியை சமாளித்துக் கொள்ள முடியாத முகவர்கள் ஏமாற்றி சேகரித்த பணத்துடன் தலைமறைவாகி வருவதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன (யோ)

ஈழநாதம்

# அ.தி.மு.கவின் ஊழல் பற்றி 2 மாதத்தில் அறிக்கை

## வாழப்பாடி தெரிவிப்பு

மத்திய அரசின் ஆணைக்கு எதிராக தமிழக அரசு வகுப்புவாத இயக்கங்களை ஊக்குவிப்பதுடன் அவற்றுக்கு புகலிடமும் வழங்குகின்றது என தமிழக இந்திரா காங்கிரஸ் வாழப்பாடிராமமூர்த்திநேற்று தமிழக அரசைக் கண்டித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடையே பேசிய வாழப்பாடி இராமமூர்த்தி, சென்னையில் பாரதீயஜனதா கட்சி நடாத்தவுள்ள ஊர்வலத்தை சுட்டிக்காட்டி, அயோத்தி பிரச்சினைக்குப் பின்னர் இக்கட்சி ஊர்வலங்களை நடாத்த எந்த மாநில அரசும் அனுமதிக்கவில்லை இவ்வூர்வலத்தை தமிழக அரசு தடுத்து நிறுத்துமா இல்லையா என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தார்.

தமிழக அரசின் போக்கு உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்ட ராமமூர்த்தி இன்னும் இரண்டு மாதத்தில் அ. தி. மு. க. அரசின் ஊழல்கள் பற்றிய அறிக்கையை வெளியிடவுள்ளதாகவும் கூறினார். அ. தி. மு க வின் ஊழலில் காங்கிரசிற்கு சம்பந்தமில்லை என்று மக்களுக்கு தெளிவுபடுத்துவது அவசியம் என்றும் அவர் கூறினார்.

இதனிடையே இந்திய அரசியல் சாசனத்தின் 191ஆம் பிரிவின் கீழ் முதலமைச்சர் ஜெயலலிதாவை பதவி விலகக் கோரும் மூன்றாவது மனுவையும் ஜனதாகட்சி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தமிழக ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங்கிடம் சமர்ப்பித்துள்ளார்.

அ. தி. மு. க ஆதரவு தேவையானால்

# எதிர்க்கட்சி ஜெயலலிதாவிடம் மடிப்பிச்சை கேட்க வேண்டும்

அ. தி. மு. கவின் ஆதரவு வேண்டுமென்றால்எதிர்க்கட்சியினரும் ஜெயலலிதாவிடம் மடிப்பிச்சை கேட்கவேண்டும் எனத் தமிழக அமைச்சர் கு. ப. கிருஷ்ணன் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 45-வது பிறந்தநாளை முன்னிட்டு திருச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கூட்டத்தில் பேசிய மற்றுமொரு அமைச்சரான ஜெயக்குமார், தி. மு. க வளர்த்துவிட்ட பல பிரச்சினைகளை ஜெயலலிதா அறிவோடும், ஆற்றலோடும் தீர்த்துவைத்துள்ளார். தி. மு. க ஆட்சியில் புலிகளின் ஊடுருவல் அதிகமாக இருந்தது. ஜெயலலிதா அதை இரும்புக்கரம்கொண்டு ஒடுக்கியுள்ளார் எனக் குறிப்பிட்டார்.

கருணாநிதி அடிக்கடி டில்லிக்கு காவடி தூக்கினார். ஆனால் ஜெயலலிதா மத்திய அரசு தவறு செய்யும்போது அதைத் துணிவோடு சுட்டிக் காட்டித் தட்டிக் கேட்கிறார் என்றும் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

# கிராம பஞ்சாயத்து சட்டம்; ஜெயலலிதா எதிர்ப்பு

## தமிழக காங்கிரஸ் ஆச்சரியம்

[சென்னை]

கிராம பஞ்சாயத்து மற்றும் நகர் பாலிகா சட்டங்களுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எதிர்ப்பு தெரிவித்திருப்பது குறித்து தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்: அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இவ் இரு சட்டங்களும் 1989 ஆம் ஆண்டிலேயே நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டவை என்றும், அப்போது அ.இ. அ. தி. மு.க. ஆதரவு தெரிவித்தது என்றும், கூட்டு ஆலோசனைக் கூட்டத்தின் போதும் அ இ. அ. தி. மு. க. ஆதரவு தெரிவித்து விட்டு இப்போது எதிர்ப்பு தெரிவித்திருப்பது வியப்பைத் தருவதாக இருக்கிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும் இச்சட்டங்களின் மூலம் மாநில அரசின் அதிகாரம் பறிக்கப்படுவதாககூறுவது முற்றிலும் தவறு என்றும் அவர் தெரிவித்தார்.

25 ஆம் திகதி சென்னையில் நடத்துவதற்கு உத்தேசித்துள்ள பாரதீய ஜனதாவின் பேரணியை மாநில அரசு தடைசெய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எறிகணை வீச்சு

நேற்றுக்காலை பலாலி இராணுவ முகாமிலிருந்து பரவலான எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. திருவடிநிலை, மாகியப்பிட்டி, குப்பிளான் ஆகிய பகுதிகளில் இந்த எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

# இன்று தபால் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'குமண' கப்பலில் இருந்து இறக்கப்பட்ட 220 தபால் பொதிகள் இன்று விநியோகிக்க நடவடிக்கைஎடுக்கப் படும் என அறிவிக்கப்பட்டது.

இத்தபால் பொதிகளில் கணிசமான அளவில் வெளிநாட்டு தபால்கள் இருப்பதாக ஒரு அதிகாரி தெரிவித்தார்

(க,நி,30)

# இறால், நண்டு பொதிகளுள் 150 இலட்சம் பணம்

[கொழும்பு]

பல இலட்சம் ரூபா அந்நியச் செலவாணி மோசடி தொடர்பாக விசேட சுங்கக்குழு ஒன்று விசாரணை மேற்கொண்டுள்ளது. இந்த மோசடி சம்பந்தமாக பல தனியார் மற்றும் அரச வங்கி ஊழியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

சிங்கப்பூர் செல்லும் பயணி ஒருவரிடம் 730 லட்சம் ரூபா பிரயாணக் காசோலை இருக்கக் கண்டு அது கைப்பற்றப் பட்டது. அத்துடன் இறால் மற்றும் நண்டுப் பொதிகளினுள் 150 இலட்சம் பணமாகவும் மறைத்துவைத்திருந்ததை சுங்கப் பகுதியினர் கண்டு பிடித்து கைப்பற்றியுள்ளனர்.

தனிநபருக்கு எந்த அடிப்படையில் 730 லட்சம் ரூபா பிரயாணக் காசோலை வழங்கப்பட்டது என்பது குறித்து சுங்க விசாரணைக்குழு விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வங்கி ஊழியர்களின் உதவியுடன் இவ்வகையான செலவாணி மோசடிகள் விமான நிலையத்தில் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக சுங்கப் பகுதி மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று சிங்கப்பூர் பிரசைஒருவரிடமிருந்து 70 தங்கக்கட்டிகளும் 1,14,000 அமெரிக்க டாலர்களும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தமாக விமான நிலையத்தில் இயங்கிய சர்வதேச வங்கியொன்றின் கிளையைச் சுங்கப்பகுதியினர் மூடியதோடு வங்கி அதிகாரியையும் கைது செய்து பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# இரண்டு இலங்கைத் தமிழர் சென்னையில் கைதாகினர்

(சென்னை)

சென்னை கோடம்பாக்கம் பகுதியில் இரண்டு இலங்கைத் தமிழ இளைஞர்கள் தமிழக காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவரையும் பொலீஸார் வழிமறித்தபோது அவர்கள் தப்பிச்செல்ல முனைந்ததாகவும், சிறிது தூரம் துரத்திச் சென்றபின் பொலீஸார் அவர்களைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் ஒருவர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் என்றும், இவர்களிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாகவும் பொலீஸார் மேலும் கூறியுள்ளனர்.

# கிளிநொச்சி, முல்லையில் மகளிர்தின பேரணி

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அனைத்துலக மகளிர்தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட மகளிர்தினவிழா நேற்றுமுன்தினம் முல்லை - மணலாறு மாவட்டத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

முள்ளியவளை- காட்டுவிநாயகர் கோவிலிலிருந்து மாணவர் பான்ட் வாத்திய இசை முழங்க விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவினரின் அணிவகுப்பைத் தொடர்ந்து மாணவர் அணியினரும் அணிவகுத்துச்செல்ல, பெண்கள் சிவப்பு வர்ண உடையணிந்து கைகளில் பதாகைகளை ஏந்திக் கோஷமிட்டவாறு பின் தொடர்ந்தனர்.

புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி, ஒட்டிசுட்டான், மணலாறு பகுதிகளிலிருந்து பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட இப்பேரணி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி 6 மணியளவில் வித்தியானந்தா கல்லூரி மைதானத்தை வந்தடைந்தது

முல்லை-மணலாறு மாவட்டச் சிறப்புத் தளபதி அன்பு தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றியதுடன் மங்கள விளக்கையும் ஏற்றியதைத்தொடர்ந்து மௌன அஞ்சலியுடன் மகளிர்தின எழுச்சிவிழா ஆரம்பமாகியது.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பைச் சேர்ந்த தீசனா தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில் மகளிர் அமைப்பு பதில் பொறுப்பாளர் ரதி முல்லை - மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா. தமிழன்பன் முல்லை-மணலாறு மாவட்ட பதில் அரசியல் நிர்வாக பொறுப்பாளர் வண்ணன், திருமதி பத்மா முருகையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்

மேற்படி மகளிர் தின விழாவையொட்டி நடைபெற்ற இலக்கிய போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை சிறப்பு தளபதி அன்பு மற்றும் அரசியல் நிர்வாக பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோர் வழங்கி கௌரவித்தனர். இறுதியாக கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

சர்வதேச மகளிர் தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் மல்லாவி, விஸ்வமடு ஆகிய பகுதிகளில் வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. இங்கு எழுச்சிப் பேரணிகளும், பொதுக் கூட்டங்களும் இடம் பெற்றன.

மல்லாவியில் இடம்பெற்ற பேரணியில் பல பகுதிகளிலும் இருந்துவந்த சுமார் ஆறாயிரம் மக்கள் கலந்துகொண்டனர், பேரணி மாலை 3.30 மணிக்கு மல்லாவி மகாவித்திலிருந்து ஆரம்பித்து மல்லாவி மாறன் தூபி அருகில் முடிவடைந்தது.

மல்லாவியில் இடம்பெற்ற கூட்டத்திற்குமகளிர்முன்னணி கிளிநொச்சிக் கோட்டப் பொறுப்பாளர் செல்வி துளசி தலைமை தாங்கினார். கிளிநொச்சிக் கோட்டப் பொறுப்பாளர் வி. பீலிக்ஸ் மங்கள விளக்கு ஏற்றிக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார். கிளிநொச்சி கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் செழியன் சிறப்புரை நிகழ்த்தினார்.

மகளிர் முன்னணியின் சார்பில் உரையாற்றிய செல்வி த. சுதா தனது உரையில்; பெண்களின் அடிமையுணர்வு உடைக்கப்பட வேண்டும். ஆண்களுக்குச்சமனான சம்பள அளவுத்திட்டத்தினைத் தமிழீழத்தில் உடனடியாக அமுலாக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததுடன் சீதனக்கொடுமையை இல்லாதொழிக்கப் பெண் இனத்தினரே முன்வரவேண்டுமென்றார்.

கிளிநொச்சி காவல்துறையினர் பாதுகாப்பு ஒழுங்குகளை கவனித்தனர். (16)

# யாழ்பொதுசனநூலகத்திற்கு கொழும்பிலிருந்து புத்தகம்

யாழ். நூலகத்துக்குச் சுமார் ஐந்து இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கப்பல்மூலம் எடுத்து வரப்படவுள்ளன.

கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணம்திரும்பிய யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு.வி.பி.பாலசிங்கம் இத்தகவலை வெளியிட்டார்.

ஏசியா பவுண்டேசன், அமெரிக்கன் சென்ரர் ஆகிய நிறுவனங்களால் அன்பளிப்புச்செய்யப்பட்ட நூல்கள் மற்றும் கொழும்பில் கொள்வனவுசெய்யப்பட்ட நூல்கள்ஆகியவையே இவ்வாறு கப்பல்மூலம் எடுத்து வரப்படவுள்ளன. (க)

# அகதிகளுக்கு பொருள்திரட்டி போதைவஸ்து வாங்கினர்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தினால் அகதிகளாகியுள்ள மக்களுக்கு விநியோகிக்கவென வீட்டிற்குவீடு சென்று ஆடையணிகளைச்சேர்த்து அவற்றை விற்று போதைவஸ்துவாங்கிய இரு வாலிபர்களை வாதுவை பொலீசார் கைது செய்துள்ளனர்.

இந்நபர்கள் இருவரும் களுத்துறை மொரட்டுவை பகுதிகளைச்சேர்ந்தவர்களாவர்எனவும், இவர்கள் பாணந்துறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு இப்போது ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

# நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோட்டமட்டத்திலான கல்வி வளர்ச்சிக்கழக நிர்வாகிகள் தெரிவு எதிர்வரும் 27 ஆம்திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதிக்கு

# பாரதீய ஜனதா பேரணிக்கு

கிராம பஞ்சாயத்து மற்றும் நகர் பாலிகா சட்டங்களுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எதிர்ப்பு தெரிவித்திருப்பது குறித்து தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்: அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இவ் இரு சட்டங்களும் 1989 ஆம் ஆண்டிலேயே நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டவை என்றும், அப்போது அ.இ.அ.தி.மு.க. ஆதரவு தெரிவித்தது என்றும், கூட்டு ஆலோசனைக் ... அ. தி. மு. க. ஆதரவு தெரிவித்து விட்டு இப்போது எதிர்ப்பு தெரிவித்திருப்பது வியப்பைத் தருவதாக இருக்கிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும் இச்சட்டங்களின் மூலம் மாநில அரசின் அதிகாரம் பறிக்கப்படுவதாககூறுவது முற்றிலும் தவறு என்றும் அவர் தெரிவித்தார்.

25 ஆம் திகதி சென்னையில் நடத்துவதற்கு உத்தேசித்துள்ள பாரதீய ஜனதாவின் பேரணியை மாநில அரசு தடைசெய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாரதீய ஜனதா பேரணிக்கு ஜெயலலிதா நிதி உதவி

சென்னையில் எதிர்வரும் 21ஆம்திகதி பாரதீய ஜனதாக் கட்சி நடாத்தவுள்ள பேரணிக்கென அ.தி.மு.க அரசு ஒன்றரைக் கோடி ரூபாவை பாரதிய ஜனதாக்கட்சிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளதாக ஜனதாக்கட்சித் தலைவர்சுப்பிரமணியம்சுவாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இப்பேரணியை சிறப்புற நடாத்தபா.ஜனதாவிடம்நூற்றுக்கணக்கான வாகனங்களை அ.தி.மு.க கொடுத்துதவியுள்ளதாகவும்அவர்குறிப்பிட்டார்

இது குறித்து கருத்து கெரிவித்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா,பேரணி என்பது சட்டத்திற்குட்பட்ட ஜனநாயகவழிமுறையேஎன்றுகுறிப்பிட்டார் சுப்பிரபணியம சுவாமி கடந்த மூன்று மாதகாலமாக பதினேழு தடவை பேரணியை நடாத்த அனுமதி தருமாறு தமிழகஅரசை கோரி வந்த போதிலும் அதற்கு அனுமதிவழங்க மறுக்கப்பட்டு வந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

## காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவுவதை நிறுத்துக

(லண்டன்)

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவிப் பொருள்கள் வழங்குவதை நிறுத்தும்படியும், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுமுகமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும்படியும் பிரிட்டிஷ் அரசு பாகிஸ்தானுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### பிரிட்டன் கோரிக்கை

பிரிட்டன் வெளியுறவு மற்றும் காமன்வெல்த் அலுவலக அதிகாரிகள் கடந்த வெள்ளி லண்டனில் விடுத்த இவ் வேண்டுகோளில் மேலும் சிம்லா உடன்படிக்கையின் அடிப்படையில் இந்தியாவும், பாகிஸ்தானும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது. அத்துடன் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கப்படமாட்டாது என்று ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவ் அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 3 கோடி சொத்துக்களை ஜெயலலிதா சேர்த்துள்ளார்

ஜெயலலிதா முதலமைச்சர் ஆன முதல் ஒரு வருடத்திலேயே மூன்று கோடி ரூபா சொத்து சேர்த்திருக்கின்றார். இது குறித்து மத்திய அரசு சந்தேகம் கொண்டிருக்கின்றது என ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி சென்னையில் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

1991-92ஆம் ஆண்டுகளில் 2 60 கோடியாக இருந்த அவரின் சொத்து மதிப்பு 1992-93 இல் 5.81 கோடியாக உயர்ந்துள்ளதாக பாராளுமன்றத்தில் மத்திய அமைச்சர் எம். வி. சந்திரசேகர மூர்த்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

### சுவாமி குற்றச்சாட்டு

இதனால் மத்திய அரசுக்கு ஜெயலலிதா சொத்து விபரங்கள் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது. முழு சொத்து விபரத்தையும் தெரிவிக்கும்படி வருமான வரிச் சட்டம் 143ஆம் விதியின் கீழ் அவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும் சுப்பிரமணியம் சுவாமி மேலும் தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் எம். எல். ஏ. பதவியை பறிக்க வேண்டும் என்ற தனது கோரிக்கைக்கு அ. தி. மு. க. விலேயே 60 சத வீதத்தினர் ஆதரவு தருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

... காட்டித் தட்டிக் கேட்கிறார் என்றும் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

... கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது சுங்க விசாரணைக்குழு விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டு இலங்கைத் தமிழர் சென்னையில் கைதாகினர்

(சென்னை)

சென்னை கோடம்பாக்கம் பகுதியில் இரண்டு இலங்கைத் தமிழ இளைஞர்கள் தமிழக காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவரையும் பொலிஸார் வழிமறித்தபோது அவர்கள் தப்பிச்செல்ல முனைந்ததாகவும், சிறிது தூரம் துரத்திச் சென்றபின் பொலிஸார் அவர்களைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் ஒருவர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் என்றும், இவர்களிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாகவும் பொலீஸார் மேலும் கூறியுள்ளனர்.

### 1500 பரல்

யாழ். மாவட்டத்தில் உள்ள நல்லூர், மானிப்பாய் தவிர்ந்த ஏனைய 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குமான ஒதுக்கீடுகள் பின்வருமாறு:

யாழ்ப்பாணம் 131, நீர்வேலி 51, அச்சுவேலி 46, கைதடி 22, கொடிகாமம் 39, கட்டைவேலி 45, புலோலி 30 சாவகச்சேரி 55, சங்கானை 71, சுன்னாகம் 76, உடுப்பிட்டி 43, பருத்தித்துறை 62, மருதங்கேணி 21, பண்டத்தரிப்பு 33, தெல்லிப்பழை 67, அளவெட்டி 26, காரைநகர் 24, ஊர்காவற்துறை 17, வேலணை 19, புங்குடுதீவு 18. நில்கிரி கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ள 1500 பரல்களில் 897 பரல்கள் மேற்படி சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இச்சங்கங்கள் இன்றுமுதல் மேற்படி அளவு மண்ணெண்ணெயைப் பெற்று தத்தமது சங்ககுடும்பஅட்டை ஒன்றிற்கு 1 லீற்றர் 15 ரூபா வீதம் விநியோகிக்குமாறும் இதற்கான பணத்தொகையை பின்பு செலுத்தலாம் எனவும் திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நல்லூர், மானிப்பாய் சங்கங்கள் தமது பங்கீட்டாளருக்கான மண்ணெய் விநியோகத்தை ஏற்கனவே மேற்கொண்டமை தெரிந்ததே.

இதேவேளை வடமராட்சி பகுதியில் உள்ள உடுப்பிட்டி, கட்டைவேலி - நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நேற்றைய தினமே தமது விநியோகத்தை ஆரம்பித்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பருத்தித்துறை இறங்குதுறைக்கு 'நில்கிரி' கப்பலில் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெய்பரல்கள்இறக்குதல் பெரும் கஷ்டத்தின் மத்தியிலேயே நடைபெற்று வருகின்றன.

போதிய வசதிகள் இல்லாததினால் பரல்களை கடலில் மிதக்கவிட்டநிலையில் கட்டி இழுத்து கரைக்கு எடுத்து வரப்படுகின்றன.

### பென்சன் வவுச்சர்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த ஓய்வூதியகாரர்களுக்கான மார்ச் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது. இந்த வவுச்சர்கள் தபால் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

## ... லிருந்து புத்தகம்

யாழ். நூலகத்துக்குச் சுமார் ஐந்து இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கப்பல்மூலம் எடுத்து வரப்படவுள்ளன.

கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணம்திரும்பிய யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு.வி.பி.பாலசிங்கம் இத்தகவலை வெளியிட்டார்.

ஏசியா பவுண்டேசன், அமெரிக்கன் சென்ரர் ஆகிய நிறுவனங்களால் அன்பளிப்புச்செய்யப்பட்ட நூல்கள் மற்றும் கொழும்பில் கொள்வனவுசெய்யப்பட்ட நூல்கள்ஆகியவையே இவ்வாறு கப்பல்மூலம் எடுத்து வரப்படவுள்ளன. (க)

## அகதிகளுக்கு பொருள்திரட்டி போதைவஸ்து வாங்கினர்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தினால் அகதிகளாகியுள்ள மக்களுக்கு விநியோகிக்கவென வீட்டிற்குவீடு சென்று ஆடையணிகளைச்சேர்த்து அவற்றை விற்று போதைவஸ்துவாங்கிய இரு வாலிபர்களை வாதுவை பொலீசார் கைது செய்துள்ளனர்.

இந்நபர்கள் இருவரும் களுத்துறை மொரட்டுவை பகுதிகளைச்சேர்ந்தவர்களாவர்என வும், இவர்கள் பாணந்துறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு இப்போது ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

## ஓராண்டு நிறைவைமுன்னிட்டு மூன்று நாள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலைய ஓராண்டு நிறைவு விழா கண்காட்சி கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இன்று முதல் நடைபெறவுள்ளது. இன்று காலை 9 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராஜா இக்கண்காட்சியை ஆரம்பித்துவைக்கவுள்ளார். 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் மாவட்டப் போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்ட கணித, விஞ்ஞான பொருள்களே வைக்கப்படவுள்ளன.

இன்றும் நாளைவும் நாளை மறுதினமும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும் இக்கண்காட்சியைப் பார்வையிட விரும்பும் பாடசாலைகளை முன்கூட்டி அனுமதி பெறுமாறு மேற்படி நிலையத்தினர் கேட்டுள்ளனர்

## மன்னார் - மன்னார்த்தீவு படகு சேவை தடுப்பு

மன்னாரில் மன்னார்த் தீவுக்கான கடல் மார்க்கமான படகு போக்குவரத்துச் சேவையை இராணுவம் தடுத்துள்ளதை அடுத்துமன்னார்த் தீவு அரசாங்கக் காரியாலயங்களில் பணிபுரியும் ஊழியர்கள் இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளிலிருந்து மன்னார்த் தீவு காரியாலயங்களுக்குச் செல்ல முடியாமல் திண்டாடுகின்றனர்.

சமீபத்தில் விடத்தல் தீவு வழியாக மன்னார்த்தீவுக்கான படகு போக்குவரத்து மேற்கொள்ளப்படுவதை இராணுவம் தடுத்தது. இதனால் மன்னார் நகரிலிருந்து கிராமப்புறங்களை நோக்கி எவரும் செல்ல முடியாதநிலை நீடிபபதாகத் தெரிவிக்கப்பட்டது

கடந்த முதலாம் திகதி தொடக்கம் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மீளக்குடியமரவுள்ள மக்களை ஏற்றுவதற்காக மன்னார்த் தீவிலிருந்து விடத்தல் தீவுக்கு படகு போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

இந்தப் படகுகளில் மீளக் குடியமரச் செல்லும் மக்களைத் தவிர வேறு எவரும் பயணம் செய்ய முடியாது என இராணுவம் கடும் உத்தரவு விதித்துள்ளதாம். இதனால் ஏராளமான பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் என்று வவுனியாவிற்கு வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார்த் தீவுக்குள் சிக்குண்ட வடபகுதி மக்களில் பலர் புத்தளம் ஊடாக வவுனியா வந்து வடபகுதி நோக்கிப் பயணம்செய்கின்றனர். [தி[

### பெரிய

பெரிய பண்டிவிரிச்சான் பகுதிக்கு வந்த குண்டுவீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசித்தள்ளின. உலங்குவானூர்தி யொன்றும் தாக்குதலை நடாத்தியது. இத்தாக்குதல்களால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

... லாக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததுடன் சீதனக்கொடுமையை இல்லாதொழிக்கப் பெண் இனத்தினரே முன்வரவேண்டுமென்றார்.

கிளிநொச்சி காவல்துறையினர் பாதுகாப்பு ஒழுங்குகளை கவனித்தனர். (16)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோட்ட மட்டத்திலான கல்வி வளர்ச்சிக்கழக நிர்வாகிகள் தெரிவு எதிர்வரும் 27 ஆம்திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக தங்கள் கொத்தணி மட்டத்திலான நிர்வாகக் குழுவினைத் தெரிவுசெய்து அவர்களது பெயர் விபரங்களை அனுப்பி வைக்குமாறு பண்டத்தரிப்புக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் த. துரைசிங்கம் கேட்டுள்ளார்.

### வீரச்சாவு

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் றெஜி [கறுப்பையா கிருஷ்ணமூர்த்தி கட்டையடம்பன், மன்னார்], ஆதரவாளர் தங்கராசா திலீபன்[வயது21, சாஸ்திரி கூளாங்குளம் வவுனியா] ஆகிய இருவருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

★

### வீரவேங்கை வாணன்

08- 03- 93 திங்கட்கிழமை மன்னார் பகுதியில் இராணுவத்தினருடன் இடம் பெற்ற மோதலில் வீரவேங்கை வாணன் [பொன்னுச்சாமி ஈஸ்வரநாதன் [திருமலை கிண்ணியா, தற்போதைய முகவரி; ஆண்டான்குளம், அடம்பன்] வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### சிறுவிள்ான்

மாகக் காட்சியளித்தது.

தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே வீடுகளை இவ்விதம் இராணுவத்தினர் வெடிவைத்துத் தகர்த்துவருகின்றனர். இவ்வெடிச் சத்தங்களை அடுத்து அளவெட்டி வடக்கு மக்கள் பெரும் பீதியடைந்தனர். (11) (09)